
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :30 April 2026
கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பண்டைச் சமூகமும் மாணாக்கர் கல்வி நிலையும்

# Ancient Society and Student's Educational Level

**முனைவர் க.இராமதுரை,** உதவிப் பேராசிரியர்-தமிழ் உயராய்வுத்துறை, மருதுபாண்டியர் கல்லூரி, தஞ்சாவூர்-613 403

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

*Dr. G. RAMADURAI, Assistant Professor — Department of Tamil,*

*Maruthupandiyar College, Thanjavur-613 403 (Affiliated to Bharathidasan University)*

*ORCiD: https://orcid.org/0009-0006-8540-9340*

***Abstract***

*Thirukkural education, which is the chief among the alms books, highlights the excellence of education and the value of the learned in the society in terms such as Kallam. The later education researchers have mentioned a lot about the ancient education system, about the student status, and about the trends of educational development. There is no definite evidence that thousands of educational institutions existed in ancient times like the ones we have today. Education is a necessity of all times, for every individual and social concept. This research paper describes the status (nature) of the education of students in the ancient society.*

***Keywords:*** *Education in Ancient Society, Academic Excellence, Student Learning, Ancient Norms, Rigor in Learning, Type of Learning, Learning Methods, Punishment, Student Initiative, Writing Practice, Student Work and Discipline.*

**ஆய்வுச்சுருக்கம்**

அறநூல்களில் தலையாயதாக விளங்கும் திருக்குறள் கல்வி, கல்லாமை போன்ற அதிகாரங்களில் கல்வியின் சிறப்பையும் கற்றோர் சமூகத்தில் பெறும் மதிப்பையும் எடுத்துக் கூறுகின்றது. பழங்காலக் கல்வி முறை குறித்தும், மாணவர் நிலை குறித்தும், கல்வி வளர்ச்சியின் போக்குகள் குறித்தும், பிற்காலக் கல்வி ஆய்வாளர்கள் மிகவும் எடுத்துக் கூறியுள்ளனர். தற்காலத்தில் உள்ளவை போல் பல ஆயிரக் கணக்கான கல்வி நிலையங்கள் பண்டைக்காலத்தில் இருந்தன என்று திட்டவட்டமாகச் சொல்லக்கூடிய சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. கல்வி எல்லாக் காலத்திலும் எல்லாத் தேயத்திற்கும்,

தனிமனிதர்க்கும், சமூகக் கருத்துக்களுக்கும் தேவைப்படும் ஒன்றாகும். இவ் ஆய்வுக்கட்டுரை, பண்டைச் சமூகத்தில் மாணவர்கள் கல்வி பயின்ற நிலையைப் (தன்மை) பற்றி விளம்புகின்றது.

**கருவிச் சொற்கள் (Keywords):** பண்டைச் சமூகத்தில் கல்வி, கல்விச் சிறப்பு, மாணவர் பாடம் அறிதல், பண்டை மரபுநிலை, கற்பதில் கண்டிப்பு, கற்றல் வகை, கற்றல் முறைகள், தண்டிக்கும் முறை, மாணவர் தன்முயற்சி, எழுத்துப் பயிற்சி, மாணவர் பணிவும் ஒழுக்கமும்,

**முன்னுரை**

அறிவியல் வளர்ச்சி பெற்ற இந்நாளில் கல்வியாளர்களே பெரிதும் சமூக வளர்ச்சிக்கு உதவி இருக்கிறார்கள். கற்றோர் சமூகத்தில் உயர்ந்தவர்களாக மதிக்கப்படுவர். இஃது எல்லாக் காலத்திற்கும் பொருந்தி வருவதாகும். கல்வியே சமூக வளர்ச்சியைக் காட்டும் அடையாளமாகவும் கருதப்பட்டு வருகின்றது. பண்டைக் காலத்தில் ஆசிரியர்கள் கற்றோர் என்றும் சான்றோர் என்றும் புலவர் என்றும் அழைக்கப்பட்டனர். ஆசிரியன் தொல்காப்பியன் என்று தொல்காப்பியருக்கு அடைமொழி தந்து கூறப்பட்டு வருவது கண்கூடு. இவ்வாசிரியர்கள் பண்பும், ஒழுக்கமும் நிறைந்தவர்களாக இருப்பதால் அறநெறி முறைகள், நீதிபோதனைகள் ஆசிரியர்களின் வழியே கற்பிக்கப்பட்டன. தற்காலத்தில் “நல்லொழுக்கக் கல்வி” என்றும் ஆங்கிலத்தில் Moral Science என்றும் அழைப்பர்.

**பண்டைச் சமூகம்: மாணாக்கர் கல்வி நிலை**

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னரே நீதிநூல்கள் படிப்படியாகத் தோன்றின. அவை யாவும் கல்வியின் சிறப்பையும், கல்வி கற்பதன் தேவையையும், சமூகத்தின் எல்லா வளர்ச்சிக்கும் கல்வி உறுதுணையாக இருப்பதையும் விளக்கிக் கூறுகின்றன. பழங்காலக் கல்வி முறை குறித்தும், மாணவர் நிலை குறித்தும், கல்வி வளர்ச்சியின் போக்குகள் குறித்தும், பிற்காலக் கல்வி ஆய்வாளர்கள் மிகவும் எடுத்துக் கூறியுள்ளனர். அவற்றை நோக்கும்போது தற்காலக் கல்விமுறை மிகுந்த மாறுதல்களைப் பெற்றுள்ளது. இந்தியாவில் மட்டுமன்றி உலக நாடுகள் முழுமைக்கும் இம்மாற்றங்கள் பொருந்துவனவாகக் காணப்படுகின்றன.

> **பழைய முறைகள் எவ்வாறிருந்தன என்பதைப் பற்றித் திட்டமாக அறிந்து கொள்ளும் சாதனங்கள் ஒன்றும் இல்லை. ஒருசில கருத்துக்களை ஊகத்தால்தான் கொள்ள வேண்டும். இன்றுள்ள அச்சுவசதி உரைநடை நூல்கள் முதலியவை அன்றில்லாததால் கற்பித்தலில் நெட்டுருச் செய்தல் முக்கியத்துவம் பெற்றிருக்க வேண்டும். இக்காலத்தில் உள்ளவை போல் பல ஆயிரக் கணக்கான கல்வி நிலையங்கள் அக்காலத்தில் இருந்தன என்று திட்டமாகச் சொல்லக்கூடிய சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. கல்வி கற்பவர்கள் பெரும்பாலும் ஆசிரியர் வீட்டிலேயே தங்கியிருத்தல் வேண்டும் (ந.சுப்புரெட்டியார், ப.65)[126]**

என்று ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகிறார். இவ்வாறு விளக்கப்படும் பழைய கல்வி முறையை அறுதியிட்டுக் கூறும் சான்றுகள் போதிய அளவில் கிடைக்கவில்லை.

**எழுத்துப் பயிற்சி**

தொடக்கக் காலத்தில் தரையில் மணலைப் பரப்பி அதன் மீது கைவிரலால் எழுத்துக்களை ஆசிரியர்கள் எழுதிக் காட்டினர். தினந்தோறும் திண்ணைப் பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்கள் தேவையான அளவிற்கு மணல் மூட்டையைக் கொண்டு சென்றனர். கைவிரலால் மணலில் எழுதுவது மாணவர்க்குச் சற்றுக் கடினமான பணியாக இருந்தது. பிறகு காலஞ்செல்ல செல்ல மாணவர்கள் வயதும் கூட சுவடியில் எழுதும் பயிற்சி தரப்பட்டது. அதற்குத் தயார் செய்யப்பட்ட ஓலைச் சுவடியும் எழுத்தாணியும் மாணவர்கள் கொண்டுச் செல்லவேண்டும்.

**கல்வி — விளக்கம்**

கல்வி தாமே கற்றல், ஆசிரியர் கற்றல், கேட்டறிந்து கற்றல் போன்ற பல அடிப்படைகளைக் கொண்டது. கல்வி கற்கும் முறையும் கற்பிக்கப்படும் முறையும் காலத்துக்குக் காலம் மாறுபட்டு வந்துள்ளது. கல்லுதல் என்னும் அடிச்சொல்லிலிருந்து தோன்றியதாகக் கூறுவர். “இளமையில் கல்” என்பதில் வரும் “கல்” முல்லை ஏவலாக வருகின்றது. “கல்” என்பதற்கு இளமையிலேயே கற்றுக்கொள் என்றவாறு பொருளுரைப்பர் (கீர்த்தி, ப.13)

**கல்விச் சிறப்பு**

மனித வாழ்வில் வளர்ச்சிக்கு உதவும் பொருள் முதலான பலவற்றுள் கல்வி முதன்மை இடம்பெறுகிறது. கல்வி அறிவு பண்பாடு, ஒழுக்கம், வாழும் முறை அனைத்தையும் அறிந்து கொள்ள உதவுகிறது. இத்தகையக் கல்வியைக் கற்க வேண்டியதைப் பல வழிகளிலும் அறநூல்கள் வற்புறுத்துகின்றன. பொருளாதாரம் தொடர்பான சிக்கல் வரும்பொழுது அதைப் பொருட்படுத்தாமல் கல்வியைக் கற்க வேண்டும் என்பதை இனியவை நாற்பது “பிச்சை புக்காயினும் கற்றல் மிகஇனிதே” (துரை.தண்டபாணி, பா.1:1) என வலியுறுத்துகிறது. இதில் இனிதே என்பது வாழ்வில் அடையும் நற்பயன்களைச் சுட்டுகிறது. கல்வி அறிவில்லாதார் சமூகத்தில் குறைய வேண்டும். அவர்களைக் கற்கச் செய்ய வேண்டும் என்பது அறநூல்களின் பொதுக் கருத்து. அவர்களை எச்சரிக்கும் முறையில் மேற்படி நூல் “கல்வியறிவில்லாதாரை நீங்கி வாழ்தல் இனிது” (துரை.தண்டபாணி, பா.25:2) என்கிறது.

**மாணவர் பாடம் அறிதல் (தன்மை)**

ஆசிரியர், மாணவர் இல்லம் தொலைவும் காலம் தவறாது ஆசிரியர் முன்னிருந்து பாடம் கேட்கவேண்டும் என்பவை இதற்குக் காரணம் ஆகலாம். எத்தகைய சூழலில் மாணவர்கள் பாடம் பயின்றனர் என்பதை நன்னூல் நன்கு விளக்குகின்றது.

**கோடல் மரபு கூறுங் காலைப்**

**பொழுதொடு சென்று வழிபடல் முனியான்**

**முன்னும் பின்னும் இரவிலும் பகலினும்**

**அகலா னாகி அன்பொடு கொழீஇ**

**குணத்தொடு பழகிக் குறிப்பின் வழிநின்று**

என்ற நூற்பாவை மாணவர் பண்பிற்கு எடுத்துக்காட்டாக, தொல்காப்பிய சிறப்புப் பாயிர உரையில் நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டுவதாக, தமிழ் பயிற்றும் முறை யில், **(தொல்காப்பியம் சிறப்புப் பாயிரம், நச்சர் உரை,** ப.65) ந.சுப்புரெட்டியார் மேற்கோளாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்கண் காணப்படும் செயல்கள் அனைத்தும் மாணவரின் கடமைகளாக அமைந்துள்ளன. நன்னூலில் குறிப்பிடப்படும் "நூல் கற்றலின் வரலாறு" என்ற தலைப்பின்கீழ் அமைந்துள்ள நூற்பாவிலிருந்து இது சற்று மாற்றம் உடையதாகக் காணப்படுகிறது. ஒருக்கால் இது பாடவேறுபாடு (variation) கொண்டதாக இருக்கலாம். மாணவன் ஆசிரியருடன் இருக்கும் நிலையில்தான் மேற்கண்ட செயல்களை நிறைவேற்றிப் பாடம் கற்க இயலும் என்பது கருத்து.

நன்னூல் ஆசிரியர் பவணந்தியார், மாணாக்கர் ஆசிரியரிடம் கல்விகற்கும் முறையை வெளிப்படையாகக் கூறுகின்றார். இம்முறை அக்காலத்தில் வழக்கில் இருந்ததாகத் தெரிகிறது. மாணவர்கள் பாடம் கேட்க ஆயத்தமாகி, ஐம்புலன்களையும் ஒருங்கே நிறுத்தி ஆசிரியரையும் தெய்வத்தையும் வணங்கிப் பாடம் கற்றதை இந்நூல் எடுத்துக் கூறுகின்றது. இதற்கு, **"நூல் கற்றலின் வரலாறு"** எனத் தலைப்பிட்டுள்ளனர்.

**கோடல் மரபே கூறுங் காலைப்**

**பொழுதொடு சென்று வழிபடன் முனியான்**

**குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்(து)**

**இருஎன இருந்து சொல்எனச் சொல்லிப்**

**பருகுவன் அன்ன ஆர்வத்த னாகிச்**

**சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்**

**செவிவா யாக நெஞ்சு களனாகக்**

**கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்**

**போஎனப் போதல் என்மனார் புலவர். (நன்னூல், நூ.40)**

என்பது நன்னூல். "இது நிறுத்த முறையானே மாணாக்கன் நூலைக் கற்குமாறு உணர்த்திற்று" என்கிறார் உரையாசிரியர் (சிவஞானமுனிவர், நூ.40 உரை, ப.75). இதன் கூறப்படும் குணத்தொடு பழகல், ஆசிரியர் குறிப்பை உணர்தல், ஆர்வம் கொள்ளல், அமைதிகாத்து கூறுவதை (ஆசான்) உள்ளத்தில் நன்கு நிறுத்தல் ஆகியவை மாணவர்கள் கற்றல் செயலில் இன்றியமையாதவை ஆகும். சமுதாயத்தில் மிகுதியான மாணவர்கள் இவ்வாறே பயிற்சி பெற்றனர். எவ்வாறு நடந்து கொண்டால் - திறமையை வளர்த்துக் கொண்டால் ஆசிரியர் மனம் மகிழ்வாரோ, அதனைக் கண்டறிந்து அதற்கேற்ப ஒழுகுதலும் மாணவர்க்குரிய கடன் ("வழிபடு இன்னது") எனச் சொல்லப்பட்டது.

**அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி**

**நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமோ(டு)**

**எத்திறத் தாசான் உவக்கும் அத்திறம்**

**அறத்தில் திரியாப் படர்ச்சி வழிபாடே. (நன்னூல், நூ.46)**

என மாணவர் வழிபடும் முறையும் சொல்லப்பட்டது. வழிபடு என்னும் பதத்திற்கு "1. கடவுளை வணங்கு, தொழு, 2. பின்பற்று follow" என்று பால்ஸ் அகராதி (ப.73) விளக்குகிறது. ஒழுக்கத்தினின்றும் வேறுபடாது நடத்தல் என்பது கருத்து.

**அறியாமை போம்**

மாணவர்கள் எல்லா நிலைகளிலும் தம்மை அடக்கிக் கொண்டு ஆசிரியர்கட்குப் பணிந்தும் அவர் சொல் கேட்டும் நடந்து கொள்ளவேண்டும் என்பதுடன் பாடங் கேட்டலிலும் நல்ல திறமை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது. ஆசிரியர்கள் குறிப்பிடும் நூலைத் தக்க முறையில் மாணவர்கள் கற்றுத் தேர்தல் கற்றல் பணியே முக்கிய இடம்பெற்றிருந்தது. இதனை,

**நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்**

**பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்**

**ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்**

**அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்**

**வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை**

**கடனாக் கொளினே மடம்நனி இகக்கும். (நன்னூல், நூ.41)**

என்று நன்னூல் குறிப்பிடுகின்றது. “இம்முறையில் நூலைக் கற்றவர்க்கு அறியாமை மிகுதியும் போம்” (சிவஞான முனிவர், ப.76) எனப் பொருள் எழுதுகிறார் சிவஞான முனிவர். மாணாக்கர்கள் அறிவிற் சிறந்த உடன் பயில்வோருடன் அன்றி வம்பரும் தூர்த்தருமாய் ஏனையரொடு சிறிதும் பயில் ஆகாது என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. “வம்பர், தூர்த்தர்” என்பதற்குத் தமிழ் அகர முதலி தீயநெறி பின்பற்றுபவன், தீயவன் (ப.937) என்று பொருள் விளக்கம் தருவது இவண் எண்ணத் தக்கதாகும்,

**பண்டை மரபுநிலை**

மேற்குறிப்பிட்ட கல்வி முறைகள் யாவும் பழங்காலத்து மரபுநிலை சார்ந்தவையாகும். நவீனகாலத்தில் அறிவியல் அடிப்படையில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இவ்வாறு மாற்றங்களை நிகழ்த்திய ஆசிரியர்கள் பழங்கால மரபு நிலையில் தொடர்ந்த கல்வி நிலை பற்றியும் எடுத்துக் கூறியுள்ளனர். இதனைக் காணும்போது பழங்காலத்திற்குத் தற்காலம் எவ்வளவு போட்டியிட்டு வளர்ந்து வந்திருக்கிறது என்பது புலனாகும்.

> **மரபுநிலைக் காலகட்டத்தில் கல்வி நம்நாட்டில் எல்லோருக்கும் கிட்டவில்லை. வசதி படைத்தவர்கள் குழந்தைகள் மட்டுமே கல்வி கற்றனர். வளர்ச்சி அடைந்த நாடான இங்கிலாந்தில்கூட பிரபுக்களின் இலக்கணப் பள்ளிகளில் கல்வி கற்றனர், ஏனையோர் ஆங்காங்கே இருந்த பொதுப் பள்ளிகளில் கல்வி கற்றனர். கல்வியில் பெரும்பாலும் மொழி, இலக்கியம், தர்க்க சாஸ்திரம், கணிதம், சமய நூல்கள் ஆகியவையே கற்பிக்கப்பட்டன. பெண்கல்வி புறக்கணிக்கப்பட்டது. அறிவியல் கல்வி வளர்ச்சி பெறவில்லை, சிந்தித்தலும் பகுத்தறிதலும் வலியுறுத்தப்பட்டன. மனனம் செய்தலும் நினைவில் ஏற்றிக் கொள்வதுமே கற்கும் முறைகளாக இருந்தன. பொதுவாக வாய்மொழியில் கற்றலே நடைமுறையாக இருந்தது. ஆசிரியர்களே அறிவுக் களஞ்சியங்களாகப் போற்றப்பட்டனர். அதாவது கல்வி, ஆசிரியரை மையமாகக் கொண்டிருந்தது. அகநோக்கு முறையே (Method of Introspection) சிந்தித்தலில் இடம்பெற்று அறிவைப் பெறுமுறையாக அமைந்திருந்தது. சுய அனுபவங்கள் மூலம் கற்றலும், முயன்று தவறிக்கற்றலும் சிறப்பிடத்தைப் பெற்றன. (கி.நாகராஜன் & மும்தாஜ்பேகம், ப.7)**

என மரபுநிலைக் கல்வி வளர்ச்சி பற்றி ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவர்கள் தற்காலக் கல்வி முறை பற்றி எழுதுங்கால் இந்திய சமுதாயத்தில் எழுந்துள்ள கல்விசார் அறைகூவல் நூலின் முகப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு வளர்ந்து வந்த கல்வி வளர்ச்சி வரலாற்றுப் போக்கில், மரபுநிலையில் போதிக்கப்பட்ட கல்வி முறை அறநூல்களில் பதிவாகியுள்ளன. அவை இங்கு விளக்கப்படுகின்றன.

மாணவர்கள் ஆசிரியர்க்குச் செய்யவேண்டிய கடமைகளாகச் சிலவற்றை ஆசாரக் கோவை குறிப்பிடுகின்றது. அவை தட்சிணை, வேள்வி, தவம், கல்வி என்ற நான்காகும். கற்பித்த ஆசிரியருக்குக்

காணிக்கை தருதல், வேள்வி செய்தல், தவம் மேற்கொள்ளுதல், கற்றறிதல் ஆகிய நான்கினையும் அறம், பொருள், இன்பம் என வகுக்கப்பட்ட மூன்று வழிகள் தவறாமல் செய்தல் குறிப்பிடத்தக்கனவாம்.

**நின்றக்கால் நிற்க அடக்கத்தால் என்றும்**

**இருக்குங்கால் ஏவாமை ஏகார் பெருந்தக்கார்**

**சொல்லின் செவிகொடுத்துக் கேட்க மீட்டும்**

**வினாவற்க சொல்லொழிந்தக் கால்.** *(ஆசாரக். 74)*

என்ற செய்யுள் மாணாக்கன் ஆசிரியர்முன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் வலியுறுத்துகிறது. மேலும் பல நூறு ஆண்டுகட்கு முன்னர் ஆசிரியர்க்கிருந்த பெருமையும் கற்பதில் மாணவர்க்கிருந்த ஆர்வமும் சுட்டடப்படுகின்றன. இச்செய்யுளையும் சமூக நிலையை ஒப்பிட்டுப் பார்த்த உரையாசிரியர் செய்யுளின் முழுப் பின்புலத்தையும் விளக்கி எழுதியுள்ளார். அவர்,

**கற்பிக்கும் ஆசிரியர் முன்பாகப் பாடம் கேட்கும்போது அடங்கி அடக்கமுடன் இருக்க வேண்டும். பாடம் சொல்லித்தராத நேரத்திலும் பணிவுடன் இருக்க வேண்டும். ஆசிரியர் பார்த்துப் போ எனச் சொல்லிய பின்பே போகவேண்டும். அதற்கு முன் போக மாட்டார். பேரறிவுள்ள ஆசிரியர் பாடம் சொல்லித் தரும்போது காது கொடுத்துக் கேட்கவேண்டும். அவர் பாடம் சொல்லி முடிந்தவுடன் சந்தேகம் கேட்கக் கூடாது. சந்தேகங்களை முதலிலேயே கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். (ப.49)**

என்று உரையாசிரியர் ஞா.மாணிக்கவாசகன் விளக்குகிறார். இதில் மாணவர் பெறும் கல்வியிலும் அவர் ஆசிரியர்க்குத் தெரிவிக்கும் வணக்கமும் பணிவும் முதன்மைப்படுத்தப் பட்டுள்ளன. கட்டுப்பாடான சமூகத்திற்கு இதுவும் தேவையானதாகும். தமிழ்ச் சமூகத்தின் பொதுப் பண்பு **“எல்லார்க்கும் நன்றாம் பணிதல்”** (குறள்.125) ஆகும். அது ஆசிரியர்க்குத் தனிச்செல்வாக்கை உருவாக்கியுள்ளது சமூக வளர்ச்சியாகும். கற்பித்த கல்வி முறையைப் பின்பற்றுவதில் மாணவர்க்கு மிகமுக்கியப் பங்குண்டு என்பர் (ந.சுப்புரெட்டியார், ப.263).

**கற்பதில் கண்டிப்பு**

மாணவர்கள் எக்காலத்தும் ஆசிரியரின் நெஞ்சுக்கு நிறைவானவராக நடந்துகொள்ள வேண்டும் அவ்வாறின்றி மாறுபட்ட நடத்தை கொண்டவர்களை ஆசிரியர்க்கு “நோய்” என்று சிறுபஞ்சமூலம் (நூ.27) குறிப்பிடுகிறது. மொழி கற்பதிலும் கற்பிப்பதிலும் இத்துணை கண்டிப்புகள் தமிழர் பண்பாட்டுடன் தொடர்புடையன என்பதுடன் கற்பதில் கடினமான உழைப்பும் தேவைப்படுகிற அளவில் தமிழ் முதலான திராவிட மொழிகளிலும் காணப்பட்டன. இந்த நிலையில் தமிழ் மொழியின் தனிச்சிறப்புக்கள் குறித்து அறிஞர் பலரும் எடுத்துக்காட்டியுள்ளனர். சான்றாக,

> **“தமிழ்மொழி அதன் நுட்ப வகையிலும் அறிவுத் திட்பங்கள் வகையிலும் மட்டு மீறிய தனிச்சிறப்புடையது. அதனைச் சொல்லடுக்கிய மொழி என்பர். ஆயினும் தொடக்க நிலைத் திரிபியல் படியிலுள்ளதென்றே அதைக் குறிப்பிடலாம். அதில் வினைகளுக்குத் திணை, பால், இடவிகுதிகள் உண்டு”** *(கா.அப்பாதுரை, ப.28)*

என்று தமிழ்மொழிச் சிறப்பிற்கு இதுபோன்று பல எடுத்துக் காட்டுக்களைச் சுட்டலாம்.

பொதுவாக, மாணவர்கள் ஆசிரியர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் எனச் சிலவற்றை நீதிநூல்கள் கூறுகின்றன. இவற்றைப் பல இடத்திலும் காணமுடிகிறது. மட்டுமல்லாது தாய் தந்தையையும் ஆசிரியர்களை வணங்கித் தொழுதல்போலக் காலந் தவறாது வணங்க வேண்டும் என்று ஆசாரக் கோவை (நூ.4) கூறும், சீரிய ஒழுக்கமும் சிந்தனையும் உடையவரிடம் (மாணவர்) கல்வி வந்துசேரும். விளையாட்டுத்தன்மையுடைய சிந்தனையற்றவர்களிடம் கல்வி வளராது என்று கல்விக்கும் மாணவர்க்கும் உள்ள உறவை,

> **போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி**
>
> **மீக்கொள் நகையினார் வாய்ச்சேரா . . . .(பா.24:1-2)**

என்பது நீதிநெறி விளக்கம் குறிப்பிடுகின்றது. ஆசிரியர்களிடம் மாணவர்கள் பாடம் கேட்கச் செல்லுங்கால் குறிப்பிட்ட சில பொருள்களை மாணவர்களே கொண்டு செல்லவேண்டும் என்ற மரபு இருந்துள்ளது. ஆசிரியர் இல்லத்திலேயே தங்கிப் பாடம் கேட்கிறவர்கள் தங்கள் தங்கள் இல்லத்திலிருந்து அப்பொருள்களைக் கொண்டுவந்து தருவர். இவற்றை நோக்குங்காலச் சமூக அமைப்பிற்கும் இக்கால வளர்ச்சிக்கும் உள்ள பாகுபாடு நன்கு விளங்கும்.

> **உணவும் உடையும் எழுத்தாணியும் சுவடியும் பெருவிருப்பத்துடன், கணக்கும் இலக்கணமும் மாணவர்க்குரிய நற்குணமும் பொருந்த ஆசிரியர் சொல்லக்கேட்டு, ஏட்டில் எழுதியும் எழுதியதைப் படித்தும்**
> **. . . . தம்பணியை மாணவர்கள் செய்வர்**

என்று ஞா.மாணிக்கவாசகன் தம் உரையில் (ப.64) விளக்கமாக 63 ஆம் பாடலுக்கு எழுதுகிறார். ஆசிரியர்க்குப் பயன்படும் பொருளாகவும் சிலவற்றை மாணவர்கள் கொண்டு செல்ல வேண்டும் என்றும் கூறப்படுகிறது (ஏலாதி, பா.63).

**கற்றல் வகை**

நீதி நூல்கள் எழுந்த காலத்திலும் அவற்றிற்கு முன்பேயும் சமூகத்தில் பின்பற்றப்பட்ட கற்பித்தல் முறையும் கற்றல் முறையும் நீதி நூல்களின் வழியிலும் மேலும் பல துணை ஆதாரங்களைக் கொண்டும் அறிந்துகொள்ள முடிகிறது. திண்ணைப் பள்ளிகள் எனக் கூறப்பட்டவற்றிலும் குருகுலம் நடத்தப்பெற்ற இடத்திலும் பல்வேறு கல்வி முறைகள் பின்பற்றப்பட்டன. ஓரளவு பொருளாதார வசதியுள்ள

மாணவர்களே கல்வி கற்க வந்தமையால் கற்பித்த இடங்கள் நல்ல இடங்களாகவே இருந்தன. ஆசிரியர் தங்கியிருந்த இல்லங்களே மாணவர்கள் கற்க உதவியாக இருந்தன. ஆசிரியர் வீட்டுப் பிள்ளைகளும் மற்றவர்களும் கல்வி கற்றனர் என்பதால் கற்பதில் வேறுபாடுகள் இருந்திருக்கக் கூடும்.

**கற்றல் முறைகள்**

பழங்காலம் முதல் தற்காலம் வரை கல்வி கற்பிப்பதில் பல்வேறு மாற்றங்கள் - முறைகள் (Methods) நிகழ்ந்து வருகின்றன. மனப்பாடம் செய்து ஆசிரியர் முன்னிலையில் மாணவர்கள் ஒப்புவித்தலே சிறந்த முறையாகப் பின்பற்றப்பட்டு வந்தது. தினந்தோறும் வந்து மாணவர்கள் ஒப்புவிக்க வேண்டியதை முதல் நாளே சொல்லி அனுப்பி விடுவர் ஆசிரியர். மாணவர்கள் அதனை மறந்துவிடாமலிருக்கச் சில குறிப்புக்களையும் சொல்லி அனுப்புவர். உ.வே.சா. மாணவராயிருந்த காலத்தில் நிகழ்ந்த ஒன்று அவர் கூற்றாலேயே விதந்தோதப் பட்டுள்ளது. அதுபற்றி உ.வே.சாமிநாதையர்,

> **ஒவ்வொருநாளும் பாடங்கள் முடிந்தவுடன் பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பும்போது அவர்களுடைய ஞாபக சக்தியை விருத்தி செய்வதற்காக ஒவ்வொருவருக்கும் பூ, மிருகம், பட்சி, ஊர் இவற்றின் பெயர்களை வகைக்கு ஒன்றை உபாத்தியாயர் சொல்லி அனுப்புவார். அந்தப் பெயர்களை மறுநாள் வந்து மறவாமல் சொல்லவேண்டும். மறந்து விடுமோ என்ற பயத்தால் பிள்ளைகள் சில தமக்கு உபாத்தியாயர் சொன்ன பெயர்களைத் தம் தாய் தகப்பனாரிடம் சொல்லிவிடுவார்கள். மறுநாள் விடியற் காலையில் அவர்களிடம் அவற்றைக் கேட்டுத் தெரிந்துகொண்டு வந்து சொல்வார்கள் (உ.சே.சாமிநாதையர், ப.54)**

என்றெழுதுகிறார். மனப்பாட முறையில் பாடங்கள் சொல்லித் தரப்பட்டதற்கே இது தகுந்த எடுத்துக்காட்டாகும்.

**தண்டிக்கும் முறை**

பாடங்களை மனனம் செய்து ஒப்புவிக்காத மாணவன் மிகவும் தண்டிக்கப் பட்டான். ஆசிரியர் தன் கையில் கொண்டுள்ள பிரம்பாலடித்தும் வேறுபல தண்டனைகள் அளித்தும் படிக்கச் செய்தனர். சொன்னபடி படித்து ஒப்புவிக்காத மாணவனைப் பள்ளியிலிருந்து வெளியேற்றிவிடுவதும் உண்டு. செல்வந்தர்கள் வீட்டுப் பிள்ளைகளாக இருந்தாலும் அவர்களுக்கும் இத்தகைய தண்டனைகள் உண்டு. ஆசிரியர்க்குச் சமூகத்தில் அத்துணையளவு அதிகாரம் இருந்தது.

> **பள்ளிக் கூடத்தில் உபாத்தியாயர் செய்விக்கும் தண்டனைகள் மிகவும் கடுமையானவை. அவரது பிரம்படி ஒன்றினாலேயே மாணாக்கர்கள் கதிகலங்குவார்கள். விட்டத்தில் கயிற்றைக் கட்டி அதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு சில நேரம் இருக்கும்படி செய்வது ஒரு தண்டனை. அதைக் 'கோதண்டம்' என்று கூறுவர். அப்படிப் பையன் தொங்கும்போது கீழிருந்து உபாத்தியாயர் அவனது காலில் அடிப்பதும் உண்டு. நான் ஒருமுறை இந்தத் தண்டனையை**

**அடைந்திருக்கிறேன். பாடம் சொன்னவனைச் சொல்லாதவன் முதுகில் ஏறச் செய்து பிற்பகலில் பிள்ளைகளைச் சுற்றிவரச் செய்வது வழக்கம். அதற்குக் குதிரையேற்றம் என்று பெயர். அவ்விதம் நான் ஒருமுறை சவாரி செய்திருக்கிறேன்" (என் சரித்திரம், ப.57)**

என்று குறிப்பிடுகிறார் உ.வே.சாமிநாதையர். இது மாணவர்களை அச்சுறுத்திப் பாடம் கற்பித்த முறையாகும். இம்முறை இக்காலத்தில் கண்டிக்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கே இது தவிர்க்கப்பட வேண்டியது என எடுத்துச் சொல்லப்படுகிறது. பழங்காலத்தில் ஊருக்கு ஊர் இருந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களில் இது பின்பற்றப் பட்டது. அடிக்குப் பயந்தாவது படிப்பான் என்ற எண்ணம் பெற்றவர்களுக்கும் ஆசிரியர்க்கும் இருந்தது. இதனால் பல விவரங்கள் மாணவர்க்கு மனப்பாடம் ஆயின. ஆசிரியரின் வழிக் கற்க வாய்ப்பில்லாதவர், கற்றவர்களுடன் சேர்ந்து பழகினும் கல்வியறிவு கிடைக்கப்பெறும் என்று நாலடியார் கூறுகின்றது.

**கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**

**நல்லறிவு நாளும் தலைப்படுவர் . . . . (நாலடி. 139:1-2)**

என்பது செய்யுள் தொடர். இஃது கல்விக்கும் உலகியலுக்குமுள்ள உறவைத் தெளிவுறுத்தும் ஒன்றாம். கற்பதில் ஆர்வமுள்ளவர் மெய்ப்பொருளை உணர்த்தும் நூல்களைக் கற்கவேண்டும் (நாலடி.140:1-2). அஃதன்றி உலக வாழ்வியலை உணர்த்தும் நூல்களையே கற்பது பயன் தராது என்றும் இதனுள் கூறப்பட்டுள்ளது.

**மாணவரின் தன்முயற்சி**

ஆசிரியர் கற்பித்தலும் அவர்தரும் பயிற்சியும் ஒருபுறமிருப்பினும் மாணவர் தாமே முயன்று ஆசான் சொற்படி கற்றுத் தேறவேண்டும். இஃது மாணவரின் அடிப்படைக் குணமாகவும் இருக்கவேண்டும் என்ற கருத்தும் நன்னூல் போன்ற நூல்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக. (குறள்.391)**

என்பது மாணவனின் தன்முயற்சியையே பெரிதும் உணர்த்துகின்றது. **"உடையார்முன் இல்லார்போல்"** (குறள்.395) இருந்து கற்றலும் இதுவே ஆகும். மாணவன் மனத்திட்பம் உடையவனாகவும் நூலைக் கற்கும் முறையிலும் சில ஒழுங்குகள் பழங்காலத்தில் மாணவர்கள் கடைப்பிடித்ததை நன்னூல்,

**நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்**

**பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்**

**ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்**

**அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்**

**வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை**

**கடனாக் கொளினே மடம்நனி இகக்கும் (நன்னூல், நூ.41)**

என்கிறது. மேற்கூறியவாறு நூல்களைப் படித்து அறிந்தால் அறியாமை நீங்கி அறிவு பெருகும் என்பது இதன் கருத்து. மேற்சூத்திரத்தை விளக்கும் உரையாசிரியர்,

**முற்சூத்திரம் (நூ.40) மாணாக்கன் புறத்தொழுக்கத்தோடும் அகத்தொழுக்கத்தோடும் பயிலும் முறையைப் பொது வகையால் கூறியது. இச்சூத்திரம் நூலைப் பயிலுதற்கண் அஞ்சாது, மேற்கொள்ள வேண்டிய கடமைகளையும், முறைமைகளையும் அறிவிக்கின்றது. வழக்கு - உலக வழக்கு, செய்யுள் வழக்கு. ஆசான் சார்ந்து அவை அமைவரக் கேட்டல் - ஒரு குறிகேட்போன் இருகாற்பின் கேட்பின் பெருகநூலிற் பிழைபாடிலன் ஆதலின் ஒரு முறை ஆசிரியரிடம் பயின்றவற்றை மீண்டும் ஆசிரியரிடம் சென்று வினாவித் தெரிந்து கொள்ளுதல். அம் மாண்புடையோர் - இவ்வியல்புகளிற் சிறிதும் குன்றாத உடன் பயில்வோர். மாணாக்கர்கள் அறிவிற் சிறந்த உடன் பயில் வோருடனன்றி வம்பரும் தூர்த்தருமாய ஏனையரொடு சிறிதும் பயிலல் ஆகாதென்பது வலியுறுத்தப்பட்டது. மடம் - அறியாமை.(சிவஞான முனிவர், ப.76)**

என விளக்குகின்றார். இதனாலும் மாணவர்கள்தம் முயற்சியால் பலவற்றைக் கற்றுக்கொள்ளல் தேவை என்பது அறியப்பட்டது. இதன் பயன் கல்வி கற்றவர்க்கு **"அறியாமை மிகுதியும் விலகும்"** என்பதாம். இவ்வாறு வளர்ந்து வந்த கல்வி முறை பெரும் மாற்றத்திற்குள்ளானதையும் அறிய முடிகிறது.

மனத்தில் விழுப்பம் உடையவனாகவும் ஆசிரியர் கூறுவதை முழுவதும் உணர்ந்து ஏற்றுக்கொள்ளும் மனநிலை உடையவனாகவும் இருத்தல் வேண்டும் என்பதையும்,

**கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளங்கொளக்**

**கோட்டமின் மனத்தினூல் கொடுத்தல் என்ப. (நன்னூல், நூ.36:6-7)**

என்ற நன்னூல் கூற்றால் அறியலாம். கற்கும் முறையில் மாணவர், தலைமாணாக்கர், இடை மாணாக்கர், கடை மாணாக்கர் என்று மூவகை யினராய்ப் பிரித்தும் கூறப்படுகின்றனர். இதுவும் மாணவரின் தனித் திறமையைக் காட்டி நிற்பதாகும் (சிவஞான முனிவர், நூ.38 உரை, ப.74). மாணவர் கல்வி கற்கும் முறையைக் "கோடல் மரபு" (சிவஞானமுனிவர், நூ.40:1உரை, ப.75) என்று பண்டை நாளில் கூறிவந்தனர். அத்தருணத்திலும் மாணவன் மேற்கொள்ள வேண்டிய சில தேவையான நடத்தை முறைகள் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. நன்னூல், தொல்காப்பிய உரைகள் முதலானவற்றில் இவை எடுத்துக் கூறப்பட்டுள்ளன. "உரிய நேரத்தில் செல்லல் தொடங்கிப் பல செயல்முறைகளும் முடிந்தபின் மாணவர்களை ஆசிரியர் "போல" எனச் சொல்லும் வரையில் ஆசிரியர் சொல்வதைக் கேட்ட வண்ணம்

இருத்தல் வேண்டும்'' (சிவஞான முனிவர், நூ.40 உரை, ப.75) என்பது வரை பலபடச் சொல்லப்பட்டுள்ளன.

**மாணவர் பணிவும் ஒழுக்கமும்**

ஆசிரியர்களிடம் மாணவர்கள் பழகுவது மிகுந்த எச்சரிக்கையும் மதிப்பும் கொண்டது. எளிமையாக இந்த உறவு அமைந்துவிடுவதில்லை. தமக்கு அறிவு பெருகுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதை ஆசிரியர் உணருமாறு மாணவர்தம் நடத்தையால் தெரிவித்தல் கடமையாகச் சொல்லப்பட்டது. ஆசிரியர் பெற்றோரினும் மேலானவர் எனக் கருதப்பட்டதைப் பொதுக் கருத்தாகக் கொண்டு நீதி நூல் பாடப் பட்டிருக்கின்றன. **"நின்றக்கால் நிற்க . . .** " (ஆசாரக். 74) எனத் தொடங்கும் மாணவரின் பணிவு பற்றியும் ஆசிரியர் முன் அவர் அடக்கத்தோடு நடந்துகொள்ள வேண்டிய முறை பற்றியும் குறிப்பிடுகிறது.

முதற்கண் ஆசிரியர்முன் அமர்ந்து பாடம் கேட்கும்போது மிகுந்த அடக்கத்தோடு அமர்ந்திருக்க வேண்டும்; பாடம் சொல்லித் தராத நேரத்தில் பணிவில் குறைவின்றி நடந்து கொள்ள வேண்டும்; ஆசிரியர் விடை கொடுத்த பின்னரே செல்லுதலும், பேராசான் பாடஞ் சொல்லும்போது கவனச் சிதைவின்றிக் கேட்டலும், பாடம் சொல்லுங்கால் எழும் ஐயப்பாடுகளை அப்பொழுதே கேட்டு ஐயம் நீக்கிக் கொள்ளுதலும் மாணாக்கரின் நடத்தைமுறை என்று மேற்சொன்ன பாடலுக்குப் பொருள் எழுதப்பட்டுள்ளது. (ஞா.மாணிக்கவாசகன், நூ.74 உரை, ப.49)[150]

**முடிவுரை**

மாணவர்கள் ஒழுக்கமும் நன்னடத்தையும் கொண்டவர்களாக அமைந்தனர். ஒழுக்கமில்லாதவர்களுக்கு ஆசிரியர்கள் பாடஞ்சொல்லத் துணிவதில்லை. ஆசிரியர்கள் ஆணைக்கும் அவர்களது அறிவுரைக்கும் கட்டுப்பட்டவர்களாக மாணவர்கள் இருந்தனர். மனப்பாடம் செய்வதில் ஆர்வமுடையவர்களாகவும் அவர் காணப்பட்டனர். மனப்பாடம் செய்து ஒப்புவித்தலும், தரையில், மணலில், ஓலைச்சுவடிகளில் எழுதும் முறைகள் கற்பிக்கப்பட்டன. மாணவர்களுக்கு எழும் ஐயப்பாடுகள் அவ்வப்பொழுதே தீர்த்து வைக்கும் முறையும் பின்பற்றப்பட்டது. ஆசிரியர் தன் கையில் கொண்டுள்ள பிரம்பாலடித்தும் தண்டனைகள் அளித்தும் படிக்கச் செய்த கண்டிப்பு பண்டை சமூகத்தில் வழக்கத்தில் இருந்த பான்மை புலப்படுகின்றது. இஃது இன்றைய உலகில் நடைமுறைப்படுத்த இயலா நிலை உள்ளது.

**துணைநூற் பட்டியல்**

அப்பாதுரை, கா. *இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு*. மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2001.

ஆசிரியர் குழு, *சமண முனிவர்கள் இயற்றிய நாலடியார் மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 2020.

இராமசாமி, ஆ.வே. (திருக்குறள் முதறிஞர்). *திருக்குறள் எளிய தெளிவுரையும் பொன்மொழியும்.* ஸ்ரீ பராசக்தி எண்டர்பிரைசஸ், திருச்சி, ஏழாம் பதிப்பு, 2012.

கண்ணுசாமி பிள்ளை (உ.ஆ.). *நீதிநெறி விளக்கம்.* ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம், இரண்டாம் பதிப்பு, 1949.

கீர்த்தி. *நீதி இலக்கியங்கள் உரையுடன் (ஆத்திசூடி, பக்.7-30).* அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை, இருபதாம் பதிப்பு, 2021.

சாமிநாதையர், உ.வே., *என் சரித்திரம்* (1950). உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, எட்டாம் பதிப்பு, 2014.

சண்முகம் பிள்ளை, மு. (தொ.ஆ.). *தமிழ்-தமிழ் அகர முதலி.* தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகம், சென்னை, நான்காம் மறுபதிப்பு, 2022.

சிவஞான முனிவர் (உ.ஆ.). *நன்னூல் விருத்தியுரை.* பாரி நிலையம், சென்னை, நான்காம் பதிப்பு, 2003.

சுப்புரெட்டியார், ந. *தமிழ் பயிற்றும் முறை.* மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், ஏழாம் பதிப்பு, 2010.

தண்டபாணி தேசிகர், துரை. (உ.ஆ.). *இன்னா நாற்பது, இனியவை நாற்பது மூலமும் உரையும்.* உமா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2019.

நாகராஜன், கி. & மும்தாஜ்பேகம். *இந்திய சமுதாயத்தில் எழுந்த கல்விசார் அறைகூவல்.* இராம் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2007.

மாணிக்கம், அ. (உ.ஆ.) *நன்னூல் காண்டிகையுரை.* பூம்புகார் பதிப்பகம், சென்னை, ஆறாம் பதிப்பு, 2015.

மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ.). *ஆசாரக்கோவை (தெளிவுரை).* உமா பதிப்பகம், சென்னை, பத்தாம் பதிப்பு,1996.

மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ.). *ஏலாதி மூலமும் விளக்கவுரையும்.* உமா பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2018.

மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ.). *சிறுபஞ்சமூலம் மூலமும் விளக்கவுரையும்.* உமா பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2018.

முருகன், வெ. *பால்ஸ் தமிழ் — தமிழ் — ஆங்கில அகராதி.* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2015.

*References*

Appadurai, Ka. *Indiya Nagarigathil Dravida Panpu.* Meyyappan Tamilaaivagam, Chidambaram, 2001.

Asiriyar Kuzhu. *Samana Munivargal Iyatriya Naaladiyar Moolamum Uraiyum.* Saratha Pathippagam, Chennai, Fifth Edition, 2020.

Ramasamy, A.Ve. (Thirukkural Mootharignar). *Thirukkural Eliya Thelivuraiyum Ponmozhiyum.* Sri Parasakthi Enterprises, Trichy, Seventh Edition, 2012.

Kannusamy Pillai (Ed.). *Neethineri Vilakkam.* Gnanasambandar Pathippagam, Dharumapuram, Second Edition, 1949.

Keerthi. *Neethi Ilakkiyangal Uraiyudan (Aathisoodi, pp.7-30).* Aruna Publications, Chennai, Twentieth Edition, 2021.

Saminathaiyar, U.Ve. *En Sarithiram* (1950). U.Ve.Sa. Nool Nilayam, Chennai, Eighth Edition, 2014.

Shanmugam Pillai, M. (Ed.). *Tamil-Tamil Agara Mudali.* Tamilnadu Paadanool Matrum Kalviyiyal Kazhagam, Chennai, Fourth Edition, 2022.

Sivagnana Munivar (Ed.). *Nannool Viruthiyurai.* Pari Nilayam, Chennai, Fourth Edition, 2003.

Subbureddiyar, N. *Tamil Payitrum Murai.* Meyyappan Pathippagam, Chidambaram, Seventh Edition, 2010.

Dhandapani Desikar, Durai. (Ed.). *Inna Narpathu, Iniyavai Narpathu Moolamum Uraiyum.* Uma Pathippagam, Chennai, Third Edition, 2019.

Nagarajan, Ki. & Mumtajbegum. *Indiya Samudayathil Ezhuntha Kalvisar Araikooval.* Ram Pathippagam, Chennai, Second Edition, 2007.

Manickam, A. (Ed.) *Nannool Kandikaiyurai.* Poompuhar Pathippagam, Chennai, Sixth Edition, 2015.

Manickavasagan, G. (Ed.). *Acharakovai (Thelivurai).* Uma Pathippagam, Chennai, Tenth Edition,1996.

Manickavasagan, G. (Ed.). *Yelathi Moolamum Vilakkavuraiyum.* Uma Pathippagam, Chennai, Second Edition, 2018.

Manickavasagan, G. (Ed.). *Sirupanjamoolam Moolamum Vilakkavuraiyum.* Uma Pathippagam, Chennai, Second Edition, 2018.

Murugam, Ve. *Pal's Tamil — Tamil — English Agarathi.* Palaniyappa Brothers, Chennai, Second Edition, 2015.

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com